**19TAU09**

# PSG COLLEGE OF ARTS & SCIENCE
(AUTONOMOUS)

## BA DEGREE EXAMINATION DECEMBER 2019
(Third Semester)

Branch – **TAMIL**

## NATAAKAVIYAL

Time : Three Hours　　　　Maximum : 75 Marks

பகுதி அ (10 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்வு செய்க.　　(10 x 1 = 10)

1 கண்ணுக்கும் செவிக்கும் கருத்துக்கும் ஓரே நேரத்தில் விருந்தளிக்கும் கலை எது?
(அ) இசைக்கலை　　(ஆ) ஓவியக்கலை
(இ) நாடகக்கலை　　(ஈ) சிற்பக்கலை

2 இரு கைகளையும் மடித்து மருங்கிலே ஒற்றி ஆடுவது-
(அ) துணங்கைக் கூத்து　　(ஆ) வள்ளிக் கூத்து
(இ) குரவை　　(ஈ) அல்லியம்

3 அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் - ஆடை வகைகளைக் குறிப்பிடுகிறார்
(அ) 56　　(ஆ) 26
(இ) 36　　(ஈ) 46

4 நாடக உலகின் இமயமலையாகப் போற்றப்படுபவர்
(அ) சங்கரதாச சுவாமிகள்　　(ஆ) பம்மல் சம்பந்த முதலியார்
(இ) பரிதிமாற்கலைஞர்　　(ஈ) கிட்டப்பா

5 தமிழ் இசைக்கருவிகளின் வதைகளைத் தேர்க.
(அ) 2　　(ஆ) 4
(இ) 6　　(ஈ) 7

6 கூத்து நூல்கள் ----- வகை ஆடலைக் கூறும்.
(அ) 11　　ஆ) 12
(இ) 13　　(ஈ) 14

7 நாடகக்காப்பியம் எது?
(அ) மனோன்மணீயம்　　(ஆ) ரூபாவதி
(இ) கலாவதி　　(ஈ) தேரோட்டி மகன்

8 ஒரு காட்சி நாடகம் எந்த ஆசிரியரால் அரங்கேற்றப்பட்டது?
(அ) கே. பாலச்சந்தர்　　(ஆ) சோ
(இ) சம்பந்த முதலியார்　　(ஈ) டி. கே. முத்துசாமி

9 நவீன நாடகத்தின் பெயர்களின் இறுதியில் இடம் பெறும் சொல்லைத் தெரிவு செய்க.
(அ) கூத்து　　(ஆ) விலாசம்
(இ) ரொண்டி　　(ஈ) ஆசிரியர் பெயர்

10 நாடகத்தின் உத்தியைக் கண்டறிக.
(அ) படிமம்　　(ஆ) குறியீடு
(இ) காட்சிப்படுத்துதல்　　(ஈ) விழிப்புணர்வு

பகுதி - ஆ (25 மதிப்பெண்கள்)

ஒரு பக்கஅளவில் விடை தருக　　**( 5 x 5 = 25)**

11 அ நாடகத்தின் சிறப்பியல்புகள் யாவை?

அல்லது

ஆ இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளை எழுதுக.

12 அ சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள நாடகக் கூறுகளின் பொருண்மைகளை எடுத்தியம்புக.

அல்லது

ஆ நாடக வளர்ச்சி நிலைகளின் வழி அறியலாகும் விழுமியங்களை ஆராய்க.

13 அ இசைக்கருவிகளின் பயன்பாடுகளைத் தேர்க.

அல்லது

ஆ நாடகத்தின் மரபுகள் பற்றி ஆராய்க.

14 அ நடிப்புக்கலைக் கூறுகள் வாயிலாக கலைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்துக.

அல்லது

ஆ நாடகக்குழுக்களின் பங்களிப்பு சமுதாயத்திற்கு எவ்வெவ் விதங்களில் பயன்களைத் தருகிறது.

15 அ காலந்தோறும் நாடகங்கள் உணர்த்தும் செய்திகளைத் திறனாய்வு செய்க.

அல்லது

ஆ நவீன நாடகங்களின் புதுமைகளைப் புரிந்து கொள்ளும் விதம்பற்றி எடுத்துரைக்க.

**பகுதி - இ** (40 மதிப்பெண்கள்)

<u>கட்டுரை வடிவில் விடையளி :</u> **( 5 x 8 = 40)**

16 அ நாடகத் தோற்றத்தால் சமூகத்தில் கலை விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

அல்லது

ஆ பழங்கால நாட்டிய நாடக நூல்கள் பற்றிய செய்திகளுள் நீவிர் அறிந்தனவற்றை ஆராய்க.

17 அ வீரர்களின் பெருமைகளை நாயக்கர் கால வரலாற்று நாடகங்கள் வழி நிறுவுக.

அல்லது

ஆ சோழ மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் நடிப்புத்திறன் எவ்வாறு அமைந்திருந்தது?

18 அ நாடக வரலாறு குறித்து ஆராய்க.

அல்லது

ஆ தெருக்கூத்து நடத்தப்படும் முறைகளைத் திறனாய்க.

19 அ நாடக உறுப்பியல்புகள் வெளிப்படுத்தும் விழுமியங்களை உணர்த்துக.

அல்லது

ஆ நாடக ஆசிரியர்கள் சமூகச்சிக்கல்களை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன?

20 அ நவீன நாடகங்கள் தமிழகத்தின் கலை உணர்வை வெளிப்படுத்தும் விதத்தை சான்றுகளுடன் கூறுக.

அல்லது

ஆ நாடகத்தின் மொழி நடை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதனை ஆறு. அழகப்பன் கூறும் செய்திகளைத் திறனாய்க.

Z-Z-Z END